G.C.E - (A/L) ICT - Classes

- Aim to A & BRAINS College – Kalmunai
- HIMALAYA College - Kaluwanchikudy
- BRIGHT - Sammanthurai
- ESC- Nintavur
- Jamiah Ayesha Siddeeqa - Mawanella
- Kekunagolla National School [ASDA]-Kurunegala
- Mercy Education Campus- Puttalam
- Muslim National School –Polonnaruwa
- isoft College, Puttalam

UNIT - 01

# துரித மீட்டல்

**Revision**

Technological Campus Kalmunai (TCK)

## ICT பற்றிய எண்ணக்கரு

இலகு வழியில் ICT ...

6 Months Express ICT Project Class

Mr. MC. Mohamed Rasmy

Teaching ICT is not my profession, it's my passion

Director – Technological Campus Kalmunai (TCK)

Teacher of ICT [G.C.E. (A/L) Specialist] B. Computer Application, SLTS-ICT, Assessor -NVQ [ICT]

Tel: 24/7: 0776408088, 0753184755

MCM Rasmy

**MCQ**

01. பின்வருவனவற்றுள் தகவல் தொடர்பாக கூற்றுக்களுல் மிகச் சரியானது
    (1) தகவலானது உண்மைக் கருத்துக்களைக் கொண்டிராத விடயங்களாகும்
    (2) முறைவழிக்கு (Process)முன்னர் பெறக்கூடியதாகவிருப்பவைகள் தகவல்களாகும்
    (3) தகவலினைப் பெறுவதற்கு தரவுகள் தன்னிச்சையாக சேகரிக்கப்பட வேண்டும்
    (4) தகவலின் துல்லியமானது உள்ளீடு செய்யும் தரவு மற்றும் செயன்முறைப்படுத்தும் துல்லியத்தில் தங்கியுள்ளது.
    (5) அதிகமான தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் மட்டுமே தீர்மானங்களினை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

02. பின்வருவனவற்றுள் பண்புசார்ந்த (Qualitative) தரவு யாது?
    (1) கலர் (2) நிறை (3) உயரம் (4) ஒரு மாணவனின் புள்ளி (5) பரப்பு

03. அச்சுப் பிரதி செய்யபட்ட வன்பிரதி (Hard Copy) ஒன்றினை இரக்கமுறை விம்பமாக (Digital Image) மாற்றும் சாதனம் சாதனம்?
    (1) MICR (2) Light Pen (3) Scanner (4) barcode reader (5) OMR

04. பின்வருவனவற்றுள் திண்ம நிலைச்சாதனமாக கருதப்படக்கூடியது
    A- காந்த நாடா (Magnetic Tape) B - இரு வட்டு (CD) C- Flash memory
    னு- நினைவக அட்டை (Memory Card) E- Blu-ray
    (1) A,C மாத்திரம் (2) C,D,E மாத்திரம் (3) A, C ஆகியன
    (4) A,B,E ஆகியன (5) A, C, D ஆகியன

01. பின்வரும் இயங்கு முறைமைகளுல் (o/s) எது திறந்த மூல இயங்கு முறைமையாகும்?
    (1)Windows 10 (2) Isuru Linux (3) Apple Mac O/S (4)MS-DOS (5)Windows XP

05. கணினியை தொடக்குவதற்கு (booting) அவசியமான அனைத்து அறிவுறுத்தல்களும் நிலையாக தேக்கி வைக்கப்படும் இடம் ……………………….. என அழைக்கப்படும்
    (1) RAM (2) Firmware (3) Hardware (4) Register (5) Cache Memory

06. நிலைப்பொருள் (Firmware) ற்கு உதாரணமாக அமையக்கூடியது?
    (1) வன்வட்டு (Hard disc) (2) பயன்படு மென்பொருள் (Utility S/W) (3) ROM உடன் கூடிய BIOS
    (4) முறைமை மென்பொருள் (System Software) (5) காந்த நாடா (magnetic tape)

07. கணினியயை ஆரம்பிக்கும் போது தரவு, தகவல், அறிவுறுத்தலகள் மின்னினைப்பு இருக்கும் வரை தற்காலிகமாக சேமித்து செயலிக்கு உதவும் நினைவகம்
    (1) ROM (2) RAM (3) Hard Disc (4) CMOS (5) BIOS

08. பதுக்கு நினைவகம் மட்டம் 1(Cache Memory L1) அமைந்திருக்கும் இடம் கீழ் வருவனவற்றுள் எது?
    (1) Mother Board (2) Processor (3) RAM (4) ROM (5) Mother Board & Processor

09. பின்வரும் கணினி சாதனங்களை கருதுக.
    A- அச்சுப் பொறி (Printer) B- வருடி (Scanner) C- ஒலிபெருக்கி (Speaker)
    D- விசைப்பலகை (Keyboard)

    மேற்குறித்தவற்றில் எவை கணினியின் வருவிளைவுச் சாதனங்களாக கருதப்படக்கூடியவை
    (1) B,D ஆகியன (2) A, C ஆகியன (3)C,D ஆகியன (4) A,C,D ஆகியன (5) A, B ஆகியன

10. தற்காலிக தேக்க சாதனமாக (Storage Device) கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
(1) வன்வட்டு (Hard disc) (2) பதியி (Register) (3) காந்த நாடா (magnetic tape)
(4) வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM) (5) நெகிழ் வட்டு (Floppy Disc)

11. பின்வருவனவற்றுள் அழிதகா (Non-Volatile) நினைவகமாக கருதப்படக்கூடியது?
(1) Register (2) ROM (3) Cache Memory L1 (4) RAM (5) Cache L3

12. பின்வருவனவற்றுள் எது/எவை நுன்முறைவழியாக்கி ஒன்றின் (Micro Processor) பகுதியாக கொள்ளப்படலாம்.
யு- எண்கணித தர்க்க அலகு (ALU) B - பதுக்கு நினைவகம் மட்டம் 3 (L3)
C- கட்டுப்பாட்டலகு (CU) D - பதியி (Register)
(1) A,C ஆகியன (2) A, B ஆகியன் (3)A,C, D ஆகியன
(4) A,B,C ஆகியன (5) B,C ஆகியன

13. மையமுறைவழியாக்க அலகில் (micro Processor) …………ல் மேற்கொள்ளப்படும் நிறைவேற்றுககைப்படுத்தல்களுக்கு தேவையான சமிக்சைகள் ……. இனால் வழங்கப்படுகின்றன.
பின்வரும் எச்சோடிச் சொற்கள் A,B ஆகியவற்றை முறையே நிரப்புவதற்கு சரியானவையாகும்.
(1) ALU மற்றும் Register (2) Register மற்றும் ALU (3) Register மற்றும் CU
(4) CU மற்றும் ALU (5) ALU மற்றும் CU

14. ஒரு கணினியின் மையமுறை வழி அலகு(micro Processor) பின்வருவனவற்றில் எவற்றைக் கொண்டுள்ளது?
(1) எண்கணித தர்க்க அலகு(ALU), கட்டுப்பாட்டலகு(CU), காட்சித்திரை(Display Unit)
(2) எண்கணித தர்க்க அலகு, கட்டுப்பாட்டலகு, உள்ளீட்டு/வெளியீட்டு சாதனங்கள்(I/O Devices)
(3) எண்கணித தர்க்க அலகு, கட்டுப்பாட்டலகு, நினைவக பதிவகங்களை (memory Registers)
(4) எண்கணித தர்க்க அலகு, கட்டுப்பாட்டலகு, துணைத் தேக்கங்கள் (Secondary Memory)
(5) எண்கணித தர்க்க அலகு, நினைவக பதிவகங்கள், உள்ளீட்டு/வெளியீட்டு சாதனங்கள்

15. செய்நிரலொன்றினை நிறைவேற்றுகையின் போது அறிவுறுத்தல்களும்(Instruction) மற்றும் தரவுகளும்(data) நேரடியாக மையமுறை வழி அலகிற்கு(micro Processor) பதுக்கு நினைவக்தினூடாக ……………. இருந்து ***பெறப்படும்.***
(1) வன்வட்டு (Hard disc) (2) தற்போக்கு பெறுவழி நினைவகம் (RAM)
(3) நெகிழ் வட்டு (Floppy Disc) (4) வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM)
(5) பளிச்சீட்டு நினைவகம் (flash memory)

16. கணினி ஒன்றின் அனுகல் வேகம் ………………. எனும் அலகினாலும் பதியியானது ………………. எனும் கொள்ளளவு அலகினாலும் அளக்கப்படுகின்றது. இடைவெளியை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொற்கள் யாது?
(1) GHz, Bit (2) MHz, MB (3) Hz, KB (4) MHz, KB (5) KHz, KB

| | | | |
|---|---|---|---|
| ***L1***- 2 KB and 64 KB. | ***L2***-256 KB to 2 MB | ***L3***-3MB to32/64 MB | ***Register*** – 32/64 Bits |

17. 2KB அளவுடைய நினைவக சாதனம் ஒன்றில் 512Bits அளவுடைய எத்தனை கோவைகளை சேமிக்க முடியும்?
(1) 8 (2) 10 (3) 16 (4) 32 (5) 24

18. கணினியொன்று எழுமாறு அனுகல் நினைவகம் (RAM) கொள்ளளவு 8GB ஐக் கொண்டுள்ளது. அதற்கு சமவலுவான கணினி நினைவக கொள்ளளவு யாது?
(1) 8192 KB (2) 8192MB (3) $2\times2^{10}$MB (4) $2\times2^{12}$KB (5) $2\times2^{11}$MB

19. கணினியொன்று மாய நினைவகமானது கொள்ளளவு 2GB ஐக் கொண்டுள்ளது எனின் அதற்கு சமவலுவான கணினி நினைவக கொள்ளளவு யாது?
(1) $2^{20}$ Byte (2) $2^{23}$ MB (3) $2^{33}$ Byte (4) $2^{30}$ KB (5) $2^{11}$MB

20. மாதாந்த Internet Broadband இணைப்பு பாவனைப் பட்டியல் தயாரிப்பதனை பிரதிநிதித்துவப்படுத்தும் செயன்முறைப்படுத்தல் பின்வருவனவற்றுள் எது?
(1) தொகுதிச் செயன்முறை(Batch Processing) (3) நிகழ்நேரச் செயன்முறை (Real time Processing)
(2) தொடராச் செயன்முறை (Online Processing) (4) பரிமாற்றச் செயன்முறை (Transaction Processing)
(5) இடைத்தொடர்பு செயன்முறை (Interactive Processing)

MCM. Rasmy

21. ………………………………….. என்பது இன்னொருவரின் வேலை (Work) அல்லது எண்ணங்கள் (Ideas) போன்றவற்றை தனக்கு ‘சொந்தமானது’ போன்று பயன்படுத்துகின்ற செயற்பாடு ஆகும்.

(1) திருட்டு (Piracy) (2) அந்தரங்கம் (Privacy) (3) பதிப்புரிமை (copyright)
(4) முறையற்ற பிரதியாக்கம் (Plagiarism) (5) காணொளி மாநாடு(video Conference)

22. Online ஊடாக வாக்குப் பதிவை (Vote) மேற்கொள்ளும் போது தேர்தல்கள் திணைக்களத்தின் வலைப்பக்கத்தில் (Web Site) பெயர், அடையாள அட்டை இலக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவற்றை உரிய புலங்களில் கட்டாயம் உள்ளீடு செய்தல் வேண்டும். மேற்படி உள்ளீடு செய்தவற்றினை சரிபார்க்கும்சரிபார்ப்பு......................................ஆகும்.

(1) வரவு (presence) சரிபார்ப்பு (2) வீச்சு (range) சரிபார்ப்பு (3) வடிவ (Format) சரிபார்ப்பு
(4) வகை (Type) சரிபார்ப்பு (5) எண் (Number) சரிபார்ப்பு


23. பின்வருவனவற்றுள் எச்சாதனம் பல்தேர்வு வினாவின் நிழற்றப்பட்ட அடையாளத்தை இனங்கண்டு கணினியினுள் தன்னிச்சையாக உள்ளீடு செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

(1) Light Pen (2) MICR (3) Scanner (4) OMR (5) OCR

24. பின்வருவனவற்றுள் தரவு மற்றும் தகவல் தொடர்பாக கூற்றுக்களுல் சரியானது

(1) தரவானது உண்மைக் கருத்துக்களைக் கொண்ட முறைவழிப்படுத்தப்படாத வியடங்களாகும்
(2) தகவலினைப் பெறுவதற்கு தரவுகள் தன்னிச்சையாக சேகரிக்கப்பட வேண்டும்
(3) இலக்கம் சார்ந்த பெறுமாணங்களை உள்ளடக்கிய தரவு வகைகள் அளவு சார்ந்த(Qualitative) தரவுகளாகும்
(4) தரவினை பெறுவதற்கு தகவல் முறைவழிப்படுத்தப்படுவதோடு அதிகமான தரவுகள் கிடைக்கும் பட்சத்தில் தீர்மானங்களினை இலகுவாக மேற்கொள்ள முடியும்.
(5) தகவலின் துல்லியமானது உள்ளீடு செய்யும் தரவு மற்றும் செயன்முறைப்படுத்தும் துல்லியத்தில் தங்கியுள்ளது.

25. தகவலின் பொன் விதி பற்றிய பின்வரும் வரைபடத்திற்கு பொருத்தமல்லாத கூற்று?




(1) தகவல் ஒன்றினை முதன் முதலில் பெறும் போது அதன் பெறுமதி உயர்வாகக் காணப்படும்.
(2) நேரம் பூச்சியமாகும் போது தகவலின் பெறுமதி உயர்வாகும்.
(3) தகவலின் பெறுமதி காலம் செல்லச் செல்ல குறைவடைந்து அது மீண்டும் தரவாக மாற முடியும்.
(4) தகவலின் பொருத்தப்பாடானது நபருக்கு நபர் ஓரே தன்மையினைக் கொண்டிருக்கும்.
(5) தகவலின் பெறுமதி இழிவாகும் சந்தர்பத்தில் நேரத்தின் பெறுமதி உயர்வாக காணப்படும்.

26. தரவு ஒன்றிலிருந்து பெறப்படும் தகவலானது நபருக்கு நபர் வேறுபடும் தன்மையையுடையது இது .................. என அழைக்கப்படும். இடைவெளிக்கு மிகவும் பொருத்தமானது.

(1) தகவலின் பொருத்தப்பாடு (2) தகவலின் பெறுமதி (3) தகவலின் மாற்றம்
(4) பண்பு சார்ந்த தகவல் (5) அளவு சார்ந்த தகவல்

27. நவீன கணினிகளில் செயல்திறனை மேம்படுத்தவதற்கு பலவித மட்டங்களில் பயன்படுத்தப்படும் பதுக்கு(cache) நினைவகங்களில் அதிக கொள்ளவிலும் மிகக் குறைந்த வேகத்திலும் இயங்கும் நினைகம்?

(1) Cache Memory L1 (2) Cache Memory L2 (3) Cache Memory L3
(2) Cache Memory L1 , L3 (5) Cache Memory L2, L3




28. தற்காலிக தேக்க சாதனமாக (Storage Device) கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எது?

(1) வன்வட்டு (Hard disc) (2) தற்போக்கு பெறுவழி நினைவகம் (RAM)
(3) காந்த நாடா (magnetic tape) (4) வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM)
(5) நெகிழ் வட்டு (Floppy Disc)

29. CPU ன் வேகத்திற்கு ஏற்றவாறு தகவல்களை நேரனு நினைவகத்திலிருந்து(RAM) தரவுகளை பெற்றுக் கொள்வதற்காக ............ எனும் நினைவகம் ALU ன் செயற்பாட்டின் போது தற்காலிகமாக நினைவகமாக ............ எனும் நினைவகமும் பயன்படுத்தப்படகின்றது.

(1) ROM மற்றும் Cache Memory (2) ROM மற்றும் RAM (3) Register மற்றும் Cache Memory
(4) Cache Memory மற்றும் Register (5) Hard Disc மற்றும் Flash Memory

30. உயிரி அளவு (Biometric) தொழிநுட்பத்தினை அடிப்படையாக கொண்ட உள்ளீட்டுக் கருவி/ கருவிகள் எது/எவை?

A- விரல் பதி வருடி (Finger Print Scanner) **B**- முக அங்கீகார வாசிப்பான்(Facial Recognition Reader)
**C**- குரல் அங்கீகார வாசிப்பான் (Voice Recognition Reader) **D**- Stylus

(1) A,B ஆகியன (2) B,D ஆகியன் (3) B,C ஆகியன
(4) A, B,D ஆகியன (5) A, B,C ஆகியன

31. பின்வரும் உள்ளீட்டுக் கருவிகளை கருதுக.

யு- சுட்டி (mouse) B- தொடுதிரை (touch Screen) C- ஒளிப்பேனா (Light Pen)
D- ஒலி வாங்கி (Mic) E-வலைக்கமரா (Web camera)

(1) A,B,D ஆகியன சுட்டும் கருவிகளாகும் (3) D,E ஆகியன வருடிக் கருவிகளாகும
(2) D குரல் வழி உள்ளீட்டுக் கருவியாகும் (4) E இணைய ஒளிப்பட கருவியாகும்
(5) A,C மாத்திரம் சுட்டும் கருவிகளாகும்

32. பின்வருவனவற்றுள் தரவு மற்றும் தகவல் தொடர்பாக கூற்றுக்களுல் சரியானது

(1) தரவானது உண்மைக் கருத்துக்களைக் கொண்டமைந்தமையினால் தீர்மான செயற்பாட்டில் பெரிதும் பங்காற்றுகின்றது.
(2) தரவுகள் முறைவழிப்படுத்தப்பட்டதன் பின்னர் அவை செல்லுபடியாக்கல் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்படுகின்றது.
(3) தரவு ஒன்றிலிருந்து பெறப்படும் தகவலானது நபருக்கு நபர் ஒரே தன்மையையுடையது
(4) நேரத்தின் பெறுமதி இழிவாகும்(பூச்சியமாகும்) சந்தர்பத்தில் தகவலின் பெறுமதியும் உயர்வாக காணப்படும்.
(5) தகவலினைப் பெறுவதற்கு தரவுகள் தன்னிச்சையாக மாத்திரமே சேகரிக்கப்பட வேண்டும்

**Note:** ***தரவு செயன்முறை படிமுறைகளை கவணிக்கவும்.***

33. கணினியின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்கள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A- அச்சுப் பிரதி செய்யபட்ட வன்பிரதி (Hard Copy) ஒன்றினை இலத்திரணியல் ஆவணமாகிய மென்பிரதியாக (Softcopy) உள்ளீடு செய்யத்தக்க மென்பொருள் Scanner ஆகும்.
B- Scanner ஒரு உள்ளீட்டு மற்றும் வெளியீட்டுசாதனமாக (I/O Device) தொழிற்படக்கூடியது.
C- இலத்திரணியல் ஆவணமாகிய மென்பிரதியாக (Softcopy) ஒன்றினை வன்பிரதியாக (Hard Copy), மாற்றும் சாதனம் Printer ஆகும்.

மேற்குறித்தவற்றில் எது/எவை சரியானவையாக கருதப்படக்கூடியவை

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3)C மாத்திரம் (4) A,C ஆகியன (5) A, B,C ஆகியன

34. வருடப்பட்டு (Scanned) விம்ப வடிவில் (Image) சேமிக்கப்பட்ட ஆவணமொன்றினை மாற்றியமைக்ககூடிய எழுத்துக்களாக (Editable Text) மாற்றுவதற்கு .................................... பயன்படுகின்றது.

(1) MICR (2) Logger (3) Scanner (4) OCR (5) OMR

35. கணினி முறைமையில் CPU ன் செயன் முறைப்படுத்தலுக்கு அவசியமான அறிவுறுத்தல்கள் ............................ இடமிருந்து பெற்று ……….. ல் தற்காலிகமாக சேமித்து வைக்கப்படுகின்றன.

(1) Cache Memory ,Register (2) Register, Cache Memory (3) RAM, Cache Memory
(4) Hard Disc, Register (5) ROM, Cache Memory

36. கணிணியில் ***நிரந்தரமாக*** சேமிக்கப்படும் தரவுகள் மற்றும் தகவல்கள் ......A......ல் வழங்கப்படும் சமிக்சைளுக்கு அமைவாக ...........B............ இருந்து ..........C............. நோக்கி அனுப்பப்படும் பின்வரும் எச்சோடிச் சொற்கள் A,B,C ஆகியவற்றை முறையே நிரப்புவதற்கு சரியானவையாகும்.

(1) ALU , RAM மற்றும் Register (2) Register மற்றும் ALU (3) CU, Register மற்றும் RAM
(4) CU, RAM மற்றும் Hard Disc (5) CU, ALU மற்றும் Hard Disc

37. தரவு சேகரித்து உள்ளீடு செய்யப்பட்டதன் பின்னர் உரிய புலங்களில் (Fields) வெற்றுப் பதிவு (is not blank) இருக்கக்கூடாது என்பதனை உறுதிப்படுத்தி சரிபார்க்கும் சரிபார்ப்பு.................................... ஆகும்.

(1) எண் (Number) சரிபார்ப்பு (2) வீச்சு (range) சரிபார்ப்பு (3) வடிவ (Format) சரிபார்ப்பு
(4) வகை (Type) சரிபார்ப்பு (5) வரவு (presence) சரிபார்ப்பு



MCM Rasmy

38. நவீன கணினிகளில் செயல்திறனை மேம்படுத்தவதற்கு பலவித மட்டங்களில் பயன்படுத்தப்படும் பதுக்கு(cache) நினைவகங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களினைக் கருதுக?

A- பதுக்கு நினைவக மட்டம்2, மட்டம்1 லும் பார்க்க கொள்ளவில் மற்றும் வேகத்திலும் குறைந்தது.

B- பதுக்கு நினைவக மட்டம்2, மட்டம்3 லும் பார்க்க கொள்ளவில் குறைந்த அதே வேளையில் வேகத்தில் கூடியது.

C- பதுக்கு நினைவக மட்டம்1, மட்டம்3 லும் பார்க்க விலை கூடியதும் கொள்ளவில் கூடியதுமாகும்.

மேற்குறித்த கூற்றுக்களுல் மிகச் சரியானது எது/எவை?

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3)C மாத்திரம் (4) A,B ஆகியன (5) B,C ஆகியன

39. பின்வருவனவற்றுள் எச்சாதனம் வங்கிகளில் காசோலைகளின் (Cheque) அடியில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளை வாசித்து கணினியினுள் தன்னிச்சையாக உள்ளிடத்தக்கது.

(1) Light Pen (2) MICR (3) Scanner (4) OMR (5) OCR

40. CPU ன் வேகத்திற்கு ஏற்றவாறு .........A.............. எனும் நினைவகத்திடமிருந்து தரவுகளை பெற்றுக் கொள்வதற்காக .....B........ எனும் நினைவகமும் ..........C............ ல் நடைபெறும் செயற்பாட்டின் போது அவற்றுக்கு தேவையான தரவுகளை வழங்குவதற்கான தற்காலிகமாக நினைவகமாக .....D........ எனும் நினைவகமும் பயன்படுத்தப்படகின்றது.

பின்வரும் எச்சோடிச் சொற்கள் A,B,C,D ஆகியவற்றை முறையே நிரப்புவதற்கு சரியானவையாகும்.

(1) ROM , Register ALU மற்றும் Cache Memory,

(2) ROM, Cache Memory, ALU மற்றும் Register

(3) RAM, Cache Memory, ALU மற்றும் Register

(4) Cache Memory, RAM, ALU மற்றும் Register

(5) Hard Disc, Register, ALU மற்றும் Cache memory

41. நிகழ்நேரச் செயன்முறை (Real time Processing) மற்றும் தொகுதிச் செயன்முறை(Batch Processing) தொடர்பான பின்வரும் கூற்றுக்களினைக் கருதுக?

A- மாதாந்த தொலைபேசி பாவனைப் பட்டியல் தயாரிப்பு நிகழ்நேரச் செயன்முறை செயன்முறைப்படுத்தலாகும்.

B- நிகழ்நேரச் செயன்முறையில் உள்ளீடு செயன்முறை மற்றும் வெளியீடு என்பன ஒரே நேரத்தில் நடைபெறும்.

C- பிழைகள் உடனுக்குடன் அறியப்படாமை தொகுதிச் செயன்முறையின் பிரதான குறைபாடாகும்

மேற்குறித்த கூற்றுக்களுல் மிகச் சரியானது எது/எவை?

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3)C மாத்திரம் (4) A,B ஆகியன (5) B,C ஆகியன

42. …………………………………….. என்பது மென்பொருளினை பயன்படுத்துவதற்கான உரிமத்தினை பெறாமல் சட்டரீதியற்ற முறையில் பயன்படுத்தல் /சட்டரீதியற்ற பிரதியாக்கம் ஆகும்.

(1) திருட்டு (Piracy) (2) அந்தரங்கம் (Privacy) (3) Phishing

(4) முறையற்ற பிரதியாக்கம் (Plagiarism) (5) பதிப்புரிமை (copyright)

**Note:** தனிப்பட்ட அந்தரங்க தகவல்கள் அனுமதியற்றவர்களின் கையினை செயன்றடைதல் - **Privacy/Confidentiality**

**Stealing / Phishing :** தீங்கு விளைவிக்கும் நோக்கோடு ஒரு நபரின் முக்கிய தகவல்களான usernames, passwords, and credit card என்பவற்றை பெற்றுக் கொள்ளும் முயற்சி ஆகும். (பாதுகாப்பதற்காக Firewall, pass word இ நம்பகத் தன்மை இல்லாத email open செய்யாதிருத்தல்)

43. தரவுகள் (Data) பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக?

A- நிறுவனத்தின் நன்மதிப்பு(Goodwill)

B- நாட்டின் குறித்த தினத்தில் பெய்த மழைவீழ்ச்சி அளவு

C- தேசிய மிருக காட்சி சாலையில் உள்ள நீர் வாழ் விலங்குகளின் எண்ணிக்கை

D- தேசிய பூங்கா வனத்தில் றோஸ் மற்றும் மஞ்சள் நிற பூக்கள் உள்ளன.

மேலுள்ள கூற்றுக்களுல் எது/எவை பண்புசார் தரவுகளை (Qualitative Data) குறிக்கின்றது?

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம

(4) A,D ஆகியன மாத்திரம் (5) B,C மாத்திரம்

MCM. Rasmy

44. G.C.E (A/L) இறுதி பரீட்சை முடிவுகள் வெளியாகும் வேளையில் நிமால் எனும் மாணவன் அதிக Z.Score புள்ளிகளை பெற்று மாவட்டத்தில் முதலாவது மாணவனாக தெரிவு செய்து வைத்திய துறைக்கு தெரிவானான். இத்தகவல்களின் உயர்ந்தபட்சப் பெறுமாணம் நிமாலுக்கு எக்கணத்தில் கிடைத்தது?
   (1) நிமால் தனது வைத்தியனாக தனது முதல் மாத சம்பளத்தை பெற்று கொண்ட கணத்தில்
   (2) நிமாலின் உறவினர்கள்,பாடசாலை அதிபர் மற்றும் நண்பர்கள் அவனுக்கு வாழ்த்து தெரிவித்த கணத்தில்
   (3) நிமால் தனது பரீட்சை முடிவினை பரீட்சை திணைக்களத்தின் வலைக் கடப்பிடத்தில் (website) அறிந்து கொண்ட கணத்தில்
   (4) நிமால் ஒரு வைத்தியனாக வைத்திய சாலையில் தனது கடமையை பொறுபேற்ற கணத்தில்
   (5) நிமாலின் தந்தை அவருக்கு வெளிநாட்டிலிருந்து அனுப்பிய பரிசு பொதியினை பெற்ற கணத்தில்

45. பின்வருவனவற்றுள் எச்சாதனம் / சாதனங்கள் தேக்கிவைக்கப்பட்ட உள்ளடகங்கள் லேசர் (டுயளநச) தொழிநுடபவியலை பயன்படுத்தி வாசிக்கப்படும்.
   A- காந்த நாடா (Magnetic Tape)   B - இரு வட்டு (CD)   C- Flash memory
   னு- பல்திறாலாற்றல் வட்டு (DVD)   E- Blu-ray
   (1) A,C மாத்திரம்   (2) B,D,E மாத்திரம்   (3) A, C ஆகியன
   (4) A,B,E ஆகியன   (5) A, C, D ஆகியன

**Part-II A**

01. தனத்துவம் (Privacy), திருடுதல் (Phishing) எனும் பதங்களின் கருத்து யாது?
02. எழுமாறு அணுகல் நினைவகம் (RAM), மற்றும் பதுக்கு நினைவகம் (Cache Memory) என்பவற்றை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
03. தனியாள் கணினிகள்(PC), கணினி வலையமைப்புக்கள் மற்றும் செல்லிடக் கருவிகள்(Mobile Devices) அனைத்தும் இணையத்தினூடாக ஒன்றினைக்கப்பட்டு தேவையான எந்த நேரத்திலும் எந்த கணத்திலும் எந்தவொரு இடத்திலிருந்து கொண்டும் மனிதர்கள் தகவல்களை பெறவும் தகவல்களை சேமிக்கவும், இலவசமாக மென்பொருட்களை பயன்படுத்தி தமக்கு தேவையானவற்றை செய்து கொள்ளவும் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
   a) மேற்குறித்த கூற்றில் பயன்படுத்தப்படுகின்ற தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் (ICT) அடிப்படையான கணித்தல் ஒன்றினை முன்வைக்குக?
   b) நீர் மேலே பகுதி (i) ல் குறிப்பிட்ட கணித்தல் சேவைகளுக்கு மூன்று உதாரணம் தருக?
   c) நீர் மேலே பகுதி (i) ல் குறிப்பிட்ட கணித்தலினால் வழங்கப்படுகின்ற சேவைகள் மூன்றினைக’ விளக்குக?
   d) நீர் மேலே பகுதி (i) ல் குறிப்பிட்ட கணித்தல் கிடைக்கும் நன்மைகள் முன்றினையும் தீமைகள் இரண்டினையும் விளக்குக?
04. பின்வரும் தோற்றப்பாட்டை கருதுக.

   Damro நிறுவனத்தின் கிளைகள் இந்தியா சிங்கப்”ர் மற்றும் கட்டார் நாடுகளில் உள்ளன. தற்போது மனித வள முகாமையாளர் விற்பனை விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு கம்பனியின் ஏனைய கிளைகளுக்கு அடிக்கடி சென்று வர வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக இத் தொழில்நுட்பம் செலவுமிக்கதும் நேரத்தை எடுப்பதுமாகும் என்பதை உணர்ந்துள்ளது.

   i. ஏனைய கிளைகளுக்கு சென்று வராமல் விற்பனை விடயங்கள் மீட்டாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்கான (ICT) அடிப்படை முறையை ஓர் (ICT) மாணவன் என்ற ரீதியில் தெரிவிக்க.
   ii. மேலே (ii) இல் தெரிவித்த முறைக்குத் தேவையான 3 அத்தியாவசிய ICT சாதனங்களைக் (devices) குறிப்பிடுக.
   iii. தற்பொழுது Damro நிறுவனமானது கட்டார் நாட்டில் இருக்கும் தனது கிளைகளில் பணி புரிவதற்காக IT Specialist பணியாளர்களை இலங்கையிலிருந்து தெரிவு செய்ய முடிவெடுத்துள்ளதுடன் பணியாளர்கள் இலங்கையில் தமது இருப்பிடத்திலிருந்து கொண்டே தமது கடமைகளை நிறைவேற்றுவார்கள் இப்பணியினை நிறைவேற்றுவதற்கு (ICT) அடிப்படை முறையை ஓர் (ICT) மாணவன் என்ற ரீதியில் தெரிவிக்க.
05. தன்னியக்கமாக இலக்கமுறையில் தரவு சேகரிக்கும் முறைகள் / சாதனங்கள் ஐந்து தருக?
06. தரவுகள் சேகரிக்கப்பட்டு அதன் பின்னர் உள்ளீடு செய்யப்பட்ட நிலையில் உள்ள தரவுகளை செல்லுபடியாக்க (Validation) பயன்படுத்தப்படும் முறைகள் மூன்றினை குறிப்பிடுக?
07. தரவுகள் செயன்முறைப்படுத்தலின் போது தொகுதிவாரியான செயன்முறைப்படுத்தலினை (Batch Time Processing) விட நிகழ்நேர செயன்முறைப்படுத்தலின் (Real Time Processing) நன்மைகள் மூன்றினை குறிப்பிடுக?
08. தனித்துவம் (Privacy), முறையற்ற பிரதியாகக்கம் (Plagiarism) மற்றும் களவாடல் (Piracy) ஆகிய பதங்களை சுருக்கமாக விளக்குக

MCM Rasmy

09. விசைப் பலகை உள்ளீடு(Keyboard Entry) உடன் ஒப்பிடும் போது நேரடி உள்ளீட்டுக் கருவிகளின்(Direct Entry) அனுாகூலங்கள் மூன்றினை எழுதுக?

10. BIOS ஆல் நிறைவேற்றப்படும் தொழிற்பாடுகள் மூன்றினை எழுதுக?

11. சேமிக்கப்பட்ட செய்நிரல் எண்ணக்கரு (Store Program Concept) வகைக் குறிக்கும் ஜொன் வொன் நியுமாண் (John Von Neumann) வரிப்படம் வரைக? **(குறிப்பு: சமிஞ்சைகள் மற்றும் தரவுப் பரிமாற்றங்கள் தெளிவாக குறித்துக் காட்டப்படல் வேண்டும்)**

12. ஏதாவது ஒரு முறைமையினை உதாரணமாக கொண்டு தரவு செயன்முறைப்படுத்தல் செயற்பாட்டினை விவரிக்க.

13. எழுமாறு அணுகல் நினைவகம் (RAM), பதுக்கு நினைவகம் (cache) என்பவற்றை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

14. கணினியின் பயன்படுத்தப்படும் அழிதகா (Non-Volatile) தேக்க சாதனங்கள் 3 தருக?

15. பதுக்கு நினைவகம் (Cache Memory) மற்றும் பதியி (Register) என்பவற்றுக்கிடையிலான தொடர்பு யாது?

16. எழுமாறு அணுகல் நினைவகம் (RAM), வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM) என்பவற்றை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

17. கணினியின் பயன்படுத்தப்படும் தற்காலிக தேக்க சாதனங்கள் 3 தருக?

18. பதுக்கு நினைவகம் (Cache Memory) எவ்வாறு பதியி (Register) இடமிருந்து வேறுபடுகின்றது?

19. நவீன கணினிகளில் செயல்திறனை மேம்படுத்தவதற்கு பலவித மட்டங்களில் பயன்படுத்தப்படும் பதுக்கு(cache) நினைவகங்களின் வகைகளை அவற்றின் பண்புகளுக்கமைவாக கீழே தரப்பட்ட அட்டவனையினை நிரப்புக?


| **காரணிகள்** | **பதுக்கு நினைவக மட்டம்1 (L1)** | **பதுக்கு நினைவக மட்டம் 2 (L2)** | **பதுக்கு நினைவக மட்டம் 3 (L3)** |
|---|---|---|---|
| கொள்ளவு (size) | | | |
| அணுகல் வேகம் (Speed) | | | |
| அமைந்துள்ள இடம் | | | |
| விலை | | | |

20. பின்வரும் மென்பொருட்களை "திறந்தமூல மென்பொருள்" "அல்லது உரிமையுடைய மென்பொருள்" என வகைப்படுத்துக?

(Linux, Windows 10, MSSQL, Mozilla Firefox Browser, Adobe Photoshop, Open Office, Apple mac os, MYSQL)

| **திறந்தமூல மென்பொருள்** | **உரிமையுடைய மென்பொருள்** |
|---|---|
| | |
| | |
| | |

21. மென்பொருளானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.




(1) A,B,C ஆகியவற்றிற்கு பொருத்தமான பதத்தினை எழுதுக?

(ii) B,C ஆகியவற்றிற்கு ஒவ்வொரு உதாரணம் தருக?

22. கீழே உள்ள அட்டவனையில் சில மென்பொருள் தரப்பட்டுள்ளன. அவற்றினை இயக்கமுறைமை, பிரயோக மென்பொருள், பயன்படு மென்பொருள் என வகைப்படுத்துக.

| **மென்பொருள் வகைகள்** | **வகை** |
|---|---|
| வட்டு ஒழுங்கமைத்தல் (Disc defragmentation) | |
| ஒபேரா (Opera) | |
| Macintosh (Mac OS) | |
| Anti-Virus | |
| Open Office Writer | |
| MS Windows 8.1 | |

MCM. Rasmy